# IV ADDITIONAL CITY CIVIL COURT, CHENNAI.

*******

**மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை.**

அசல் வழக்கு எண் :- O.S. 5077/2019 தேதி. 18.11.2022.

பெயர் : S.P. மெகருண்ணிசா வ.சா. 1

1975ம் ஆண்டின் 10வது விதியின் ஏற்பாட்டின்படி நிரூபண வாக்குமூலம் செய்யப்படுகிறது.

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

- முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 3ம் பிரதிவாதி மருத்துவர் ஜனனியை 25.06.2015ம் தேதி அன்று தான் முதன் முதலில் சந்தித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவர் என்னை மருத்துவ பரிசோதனை செய்தபிறகு அவர் வழங்கிய மருத்துவ அறிக்கை தான் வா.த.சா.ஆ.3 ஆவணமா என்றால் எனக்கு ஆங்கிலம் தெரியாததால் அந்த ஆவணம் தானா என்று என்னால் சொல்லமுடியாது.
- 25.06.2015ம் தேதி அன்று 3ம் பிரதிவாதி நுண் கதிர் படம் எடுத்ததாக கூறியுள்ளேன். அந்த நுண் கதிர் படத்தை இந்த வழக்கில் ஆவணமாக குறியிடவில்லை. ஆனால் என்னிடம் இருக்கிறது. 25.06.2015ம் தேதி எடுக்கப்பட்ட நுண் கதிர் படத்தை நான் தாக்கல் செய்து இருந்தால் அன்றைய தினம் மார்பகத்தில் கட்டி ஏதும் இல்லை என்பது தெரிந்து இருக்கும் என்றால் சரியல்ல.
- 3ம் பிரதிவாதி கொடுத்த மருத்துவ அறிக்கை மற்றும் நுண் கதிர் படத்தை பார்த்துவிட்டு 2ம் பிரதிவாதி கவலைப்படும்படி ஏதும் இல்லை என்று கூறினார் என்றால் சரிதான். மருத்துவர் செல்வி ராதாகிருஷ்ணன் அவர்களிடம் 3ம் பிரதிவாதி கொடுத்த மருத்துவ அறிக்கையையும், நுண் கதிர் படத்தையும் காண்பித்தேன்.
- மருத்துவர் செல்வி ராதாகிருஷ்ணன் என்னை பரிசோதனை செய்த பிறகு கொடுத்த அறிக்கையில் 3ம் பிரதிவாதி கொடுத்த மருத்துவ அறிக்கையில் கட்டி இருப்பது தெரிவதாக குறிப்பிட்டுள்ளார். மருத்துவர் செல்வி ராதாகிருஷ்ணன் அவர் கொடுத்த மருத்துவ அறிக்கையில் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.
- எனக்கு ஏற்பட்டுள்ள மார்பக கட்டியானது 25.06.2016க்கு பிறகு அக்டோபர் மாதத்திற்குள்ளாக ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. (சாட்சி தாமாக) நான் ஜீன் 2016 முதல் 3ம் பிரதிவாதி பரிந்துரை செய்த மாத்திரைகளை சாப்பிட்டு

வந்தேன். எனக்கு எடுக்கப்பட்ட உறீமோதெரபி அறிக்கை பற்றி வழக்குரையில் சொல்லப்படாத நிலையில் அந்த ஆவணத்தை தற்பொழுது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்ய எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

- எதனடிப்படையில் 3ம் பிரதிவாதியிடமிருந்து ரூ.5 இலட்சம் இழப்பீடாக கேட்கிறேன் என்றால் 3ம் பிரதிவாதி பரிசோதனையிட்டபோதே எனக்கு மார்பக கட்டி இருப்பதை கூறியிருந்தால் எனக்கு பின்னால் ஏற்பட்ட மன உளைச்சல் ஏற்பட்டிருக்காது என்பதால் மேற்படி தொகையை இழப்பீடாக கேட்கிறேன். மருத்துவர் ஜனனியிடம் ஸ்கேன் பரிசோதனைக்காக மட்டும் தான் போனேன். அவரிடம் மருத்துவ ஆலோசனை பெறுவதற்காக போகவில்லை.
- 3ம் பிரதிவாதி ஸ்கேன் இயந்திரத்தின் மூலமாக எடுக்கப்பட்ட படத்தின் அடிப்படையில் அவர் அறிக்கை கொடுத்துள்ளதால் அவர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவர் 2ம் பிரதிவாதி நித்யா, 3ம் பிரதிவாதி மருத்துவர் ஜனனி மற்றும் மருத்துவர் செல்வி ராதாகிருஷ்ணன் ஆகிய மூவரது அறிக்கையையும் வேறு ஒரு மருத்துவரிடம் காண்பித்து கருத்து கேட்கவில்லை. 3ம் பிரதிவாதி அவர் செய்த மருத்துவ பரிசோதனையை மருத்துவ வழிகாட்டிப்படி சரியாக செய்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken **down** by me in the open court and was read over to the witness and accepted by him/her to the correct.

Date: 18.11.2022 IV Additional Judge